**DEPOSITION OF WITNESS**

(In the Court of the Principal District Munsif, Sankarankovil

**O.S.No. 26/2020**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | Pw1 |
| Name | : | கிருஷ்ணத்தேவர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 27.11.2024 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th November 2024.

**முதல் விசாரணை :**

நான் வழக்கின் வாதி. நான் இன்று இந்த வழக்கில் எனது சத்தியபிரமாணம் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. 13.07.1977 – சண்முகம் வகையறா வாதியின் பிதாவான மாடசாமித்தேவருக்கு கொடுத்த பதிவுக்கிரைய ஆவணம் - சார்பதிவாளர் நகல். **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 05.02.2007 – வாதிக்கு வேலு வகையறா எழுதிக்கொடுத்த பதிவுக்கிரைய ஆவணம் - அசல் - **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 22.01.2020 - இணையதளம் மூலம் பெறப்பட்ட கணிணிப்பட்டா - பட்டா எண்.227 -க்கானது. **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 18.06.2012 – வாதி பட்டா எண்.227 க்கு செலுத்திய தீர்வை ரசீது - அசல். **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் வழங்க பிரார்த்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**